Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 1247/2025 Date:19.06.2026
Deposition of witness for prosecution: PW1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கண்ணன் | Village | கம்பம் வடக்கு |
| Father/ Husband Name | பிச்சை | Taluk | உத்தமபாளையம் |
| Age | 46 /2026 | Calling | தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 19.06.2026. TIME 01.35 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

கடந்த 02.10.2024–ம் தேதி நான், சார்பு ஆய்வாளர் நாகராஜன், முதல் நிலை காவலர் சரவணக்குமார் ஆகியோர்கள் ரோந்து பணியில் இருந்த போது மது விலக்கு குற்றம் சம்மந்தமாக சார்பு ஆய்வாளருக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. கம்பத்தில் உள்ள சுப்பிரமணி கோவில் தெருவில் வார்டு எண் –10–ல் சட்டத்திற்கு புறம்பாக மது விற்பனை செய்யப்படுவதாக தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்த போது எதிரி நடத்தி' வந்த பெட்டிக்கடையில் சட்டத்திற்கு புறம்பாக மது விற்பனை செய்து வந்தார். வெள்ளை நிற சாக்குபையில் 108 மது பாட்டில்கள் வைத்திருந்தார். அவற்றில் 57 பாட்டில்கள் XXX Diamond Rum–ம், 50 பாட்டில் Express brandy மது பாட்டில்களும் இருந்தன. மது விற்ற பணம் ரூ.500/– வைத்திருந்தார். எதிரி எவ்வித அச்சுறுத்தலுமின்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதனை தனிநபர் சாட்சிகள் முன்வராததால் சார்பு ஆய்வாளர் அவர்கள் என் முன்னிலையிலும், முதல் நிலை காவலர் சரவணக்குமார் முன்னிலையிலும் பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். மேற்படி பாட்டில்கள் மற்றும் ரூ.500/– பணத்தை தனிநபர் சாட்சிகள் முன்வராததால் நான் மற்றும் சரவணக்குமார் முன்னிலையில் அத்தாட்சியில் மூலம் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அவை முறையே **அ.சா.ஆ.1, 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சார்பு ஆய்வாளரிடம் தனியறிக்கை சமர்ப்பிக்கவில்லை. நான் கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுயிருந்தது என்றால் சரிதான். சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சார்பு ஆய்வாளர் வரைபடம் தயார் செய்தார். நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் காந்தி ஜெயந்தி என்பதால் புள்ளி விவர கணக்கிற்காக உயர்

அதிகாரி பதிவு செய்த பொய் வழக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து இருந்து சம்பவ இடத்தில் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் கையொப்பம் பெறப்பட்டது எத்தனை கையொப்பம் என்றால் தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் தெரியவில்லை. அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டது என்றால் தெரியவில்லை. இதிலிருந்து நான் சம்பவ இடத்தில் இல்லை என்பது தெரிகிறது என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 1247/2025 Date:19.06.2026
Deposition of witness for prosecution: PW2 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சரவணக்குமார் | Village | கம்பம் வடக்கு |
| Father/ Husband Name | கோபால் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 34 /2026 | Calling | தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 19.06.2026. TIME 01.50 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

கடந்த 02.10.2024-ம் தேதி நான், சார்பு ஆய்வாளர் நாகராஜன், தலைமை காவலர் கண்ணன் ஆகியோர்கள் ரோந்து பணியில் இருந்த போது மது விலக்கு குற்றம் சம்மந்தமாக சார்பு ஆய்வாளருக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. கம்பத்தில் உள்ள சுப்பிரமணி கோவில் தெருவில் வார்டு எண்-10-ல் சட்டத்திற்கு புறம்பாக மது விற்பனை செய்யப்படுவதாக தகவல் கிடைத்தது. அங்கு சென்று பார்த்த போது ஆஜர் எதிரி நடத்தி வந்த பெட்டிக்கடையில் சட்டத்திற்கு புறம்பாக மது விற்பனை செய்து வந்தார். வெள்ளை நிற சாக்குபையில் 108 மது பாட்டில்கள் வைத்திருந்தார். அவற்றில் 57 பாட்டில்கள் XXX Diamond Rum-ம், 50 பாட்டில் Express brandy மது பாட்டில்களும் இருந்தன. மது விற்ற பணம் ரூ.500/- வைத்திருந்தார். ஆஜர் எதிரி எவ்வித அச்சுறுத்தலுமின்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதனை தனிநபர் சாட்சிகள் முன்வராததால் சார்பு ஆய்வாளர் அவர்கள் என் முன்னிலையிலும், முதல் நிலை காவலர் சரவணக்குமார் முன்னிலையிலும் பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். மேற்படி பாட்டில்கள் மற்றும் ரூ.500/- பணத்தை தனிநபர் சாட்சிகள் முன்வராததால் நான் மற்றும் சரவணக்குமார் முன்னிலையில் அத்தாட்சியில் மூலம் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அவை முறையே **அ.சா.ஆ.3, 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சார்பு ஆய்வாளரிடம் தனியறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. நான் மற்றும் தலைமை காவலர் கண்ணன் தவிர வேறு நபர்கள் அத்தாட்சியில் கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.